பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 12 2025** **SUNDAY** **6.30 PM**

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. உலகின் பழமையான மொழி தமிழ் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

2. சுகாதார சேவைகளை வழங்குவதில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்றும் நடைபெற்றன.

5. உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியின் 7-ஆவது சுற்று முடிவில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<<<<<>>>>>>>

நடப்பாண்டில் இந்தியா பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

பல்வேறு துறைகளில் இந்தியா படைத்த சாதனைகளை பட்டியலிட்ட பிரதமர், ஆபரேஷன் சிந்தூர் நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமிதத்தை அளித்ததாக கூறினார்.

***(Sound Byte —ஆபரேஷன் சிந்தூர் Modi (1) — 33 Sec.)***

நமது இளையோர் சக்தி காரணமாக உலகமே இந்தியாவை நம்பிக்கையுடன் உற்று நோக்குவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

***(Sound Byte —இளையோர் சக்தி Modi (2) — 50 Sec.)***

பிரதமரின் இல்லந்தோறும் சூரியசக்தி திட்டத்தின்கீழ், 80 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுவதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

***(Sound Byte — சூரியசக்தி Modi (3) — 16 Sec.)***

உலகின் பழமையான மொழி தமிழ் என்று கூறிய பிரதமர், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற நமது உறுதிப்பாடு நிச்சயம் மெய்படும் என்று தெரிவித்தார்.

***(Sound Byte — தமிழ் மொழி Modi (4) — 64 Sec.)***

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்தியா வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மீண்டும் ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மன் கி பாத் நிகழ்ச்சியின் மூலம் தமிழக மக்களின் மனதை வென்றுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், தமிழின் பெருமையை உலகிற்கு மீண்டும் ஒருமுறை பிரதமர் எடுத்துரைத்திருப்பது மறக்க முடியாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமிழின் பெருமைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பிரதமரின் செயல்பாட்டை கண்டு தமிழினமே மகிழ்வதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்றும் நடைபெற்றன.

நேற்றும், இன்றும் நடைபெற்ற இந்த முகாம்கள் மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க **4** லட்சத்து **42** ஆயிரத்து **70** விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>

அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த கூட்டம் நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<<>>>>>>

சுகாதார சேவைகளை வழங்குவதில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அகமதாபாதில் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் மருத்துவர்கள் தன்னலமின்றி பணியாற்றியதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் பிஜேபி சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

*(Sound Byte — எல். முருகன் 30 Sec. )*

<<<<<<<<>>>>>>

அணுசக்தி துறையில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தச் சட்டம் வரவேற்கத்தக்கது என்று பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அணுசக்தி துறையில் புதிய வாய்ப்புகளை வழங்குவதற்கு இந்த சட்டம் வகை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு இது உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கையை தொழில்துறையினரும், புத்தொழில் நிறுவனங்களும், அறிவியல் சமுதாயமும் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தமிழக மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் சாதனை படைத்து வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

சேலம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு குறித்து காவல்துறை சார்பிலான விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுக்கும் பணி இன்று நிறைவடைந்தது.

----------------

தென்காசி மாவட்டத்தில் ரயில் மோதி **50**-க்கும் மேற்பட்ட ஆடுகள் உயிரிழந்தன.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் விடுமுறை தினமான இன்று சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வெளிமாநில லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்தது தொடர்பாக ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியின் **7**-ஆவது சுற்று முடிவில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **6** புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் நீடிக்கிறார்.

-------------

இந்தியா — இலங்கை இடையேயான நான்காவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்துவீச தீர்மானித்தது.

**<<<<<<<END>>>>>>>**